# நன்னெறி கூறும் நபி மொழி நூறு

(100 ஹதீஸ்கள் கொண்ட ஸலவாத் பாடல்கள்)




கவிமணி

மௌலவி எம்.எச்.எம் புஹாரி (பலாஹீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸலாத்துல்லாஹ் ஸலாமுல்லாஹ்
அலாதாஹா றஸூலில்லாஹ்
ஸலாத்துல்லாஹ் ஸலாமுல்லாஹ்
அலாயாஸீன் ஹபீபில்லாஹ்

தக்வா வென்னும் இறையச்சம்
தகைமை சுவர்க்கம் சேர்க்குமென
பக்குவ மாக நபி சொன்னார்
பாடி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இனிமை சான்ற நற்குணங்கள்
எம்மைச் சுவர்க்கம் சேர்க்குமென
புனிதத் தூதர் சொன்னார்கள்
போற்றி ஸலவாத் ஓதிடுவோம்
(ஸலாத்துல்லாஹ்)

பிறரை ஏசிப் பேசாதீர்!
பேணிக் கனிவாய்ப் பேசுமென
அறவுரை சொன்னார் அண்ணல்நபி
அறிந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

உற்றார் உறவை வெறுக்காதீர்!
உளத்தால் விரும்பி உதவுமென
நற்றவ நபிகள் நவின்றனரே!
நயந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

அநீதி யெவர்க்கும் செய்யாதீர்!
அயலார் துன்பம் துடைத்திடுவீர்!
புனிதத் தூதர் நபிசொன்னார்
புகழ்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரில் வெல்வோன் வீரனலன்
பொங்கும் கோபம் அடக்குவனே
வீரன் எனவே நபிசொன்னார்
விரும்பி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

ஒருவர் முகத்தைக் கனிவுடனே
உவந்து நோக்கல் தருமமென
பெருமான் நபிகள் சொன்னார்கள்
பேணி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

சாந்தி வாழ்த்தாம் ஸலாம்கூறி
சேர்ந்தே வாழ்தல் சிறந்ததென
வேந்தர் நபிகள் நவின்றார்கள்
விரும்பி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

நல்லவை செய்யத் தூண்டிடுக
தீயவை தம்மைத் தடுத்திடுக
வள்ளல் நபிதம் வாக்கேற்று
வாழ்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

வழியே தவறித் தவிப்போர்க்கு
வழியே காட்டித் துணைசெய்தல்
அழிவே யில்லாத் தருமென்றார்
அறிந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பாதை தன்னில் தீங்கிழைக்கும்
பொருளை யகற்றல் தருமென
தூதர் நபிகள் சொன்னார்கள்
தூய ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலின் கீழே உடையதனைப்
பணித்தே யுடுக்க வேண்டாமென
மேலாம் நபிகள் சொன்னார்கள்
மேன்மை ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இன்சொல் என்றும் பேசிடுக
வன்சொல் பேசா தீரென்று
அண்ணல் நபிகள் அருளினரே
அறிந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

ஈத்தம் பழத்தின் பாதியினை
ஈந்தே தானும் சுவனத்திற்
சேர்வீரென்று நபி சொன்னார்
சேர்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பசித்தோர்க் குணவு கொடுத்துதவி
பண்பாய்க் காப்பீர் என்றேதான்
கசியும் கருணை நபிசொன்னார்
கனிந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இரவில் மக்கள் தூக்கத்தில்
இருக்கும் வேளை எழுந்தேதான்
இறையைத் தொழவே நபிசொன்னார்
ஏற்று ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பொறாமை யென்னும் தீயகுணம்
பொருந்தான் இறைவன் எனவேதான்
பொறுமைக் குணத்தார் நபிசொன்னார்
போற்றி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணியால் வருந்தும் நண்பரினைப்
பேணிப் பார்த்துப் பிரார்த்தித்தல்
மனிதர் கடனென நபிசொன்னார்
மதித்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இறந்தோர் மையம் தொடர்ந்தேகி
இணைந்தே அடக்கம் செய்திடுதல்
சிறந்தோர் பண்பென நபிசொன்னார்
சேர்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

வருந்தி யழைப்போர் விருந்தேற்றல்
வளமார் பண்பே யாகுமென
பெருமான் நபிகள் பேசினரே
பேணி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

அனுமதி யின்றிப் பிறர் வீட்டில்
நுழைதல் ஆகா தென்றேதான்
முழுமதி நபிகள் மொழிந்தார்கள்
முனைந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

ஒற்றுக் கேட்டல் உளவறிதல்
ஒறுக்கும் பாவக் கருமமென
நற்றவ நபிமணி நவின்றார்கள்
நயந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

மூன்று தினத்திற் கூடுதலாய்
வெறுப்பா யிருத்தல் ஒருவருடன்
வேண்டாமென்றார் நபிநாதர்
விரும்பி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் கையே மேலதுவாம்
வாங்கும் கையோ தாழ்ந்ததென
நலங்கொள் நபிமணி நவின்றார்கள்
நாடி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இல்லாதிருக்கும் உற்றார்க்கு
ஈதல் பெரிய தருமென
வள்ளல் நபிமணி வழுத்தினரே
வாழ்த்தி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இறந்த பின்னர் குடும்பத்தார்
இரந்து திரிதல் இல்லாது
சிறந்த வழிசெய நபிசொன்னார்
சேர்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

அனாதை களையே ஆதரிப்போர்
அழகாய் என்னுடன் சுவனத்தில்
இணங்கி யிருப்பார் என்றார்கள்
ஏற்று ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

அனாதைக் குதவும் இல்லமதே
அதிகச் சிறப்பு மிக்கதென
அனாதை நபிகள் அறிவித்தார்
அறிந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பொருந்தும் பொருளே பொதிந்துள்ள
புனிதப் பெயரைப் பிள்ளைக்குப்
பொருந்தச் சூட்டும்படி சொன்னார்
போற்றி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் லாஹ்வும் அத்துடனே
அப்துர் ரஹ்மான் எனும் பெயர்கள்
செப்புஞ் சிறப்பாம் என்றார்கள்
சேர்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

நபிமார் தம்மின் பெயர்களினை
நன்றாய்ச் சூட்டச் சொல்லியநம்
நபியின் வாக்கை ஏற்போமே
நாடி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

ஒழுக்கந் தன்னைப் பிள்ளைக்கு
ஊட்டல் உயர்ந்த தருமென
வழுவா நெறிசேர் நபிசொன்னார்
வாழ்த்தி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பயன்சேர் கல்விப் பேறதனைப்
பிள்ளை தமக்குக் கொடுங்களென
நயமாய் நபிகள் நவின்றார்கள்
நாடி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

வெள்ளை நிறத்து உடைகளையே
விரும்பி யணிவீர் என்றேதான்
வெல்லும் சொல்லார் நபிசொன்னார்
விரும்பி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

மெல்லிய உடைகள் அணிவோரை
மேலாம் நபிகள் சபித்தார்கள்
உள்ளந் தனிலே இதையேற்று
ஒளிரும் ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் பட்டும் தங்கமதும்
அணிதல் ஆகா தெனவேதான்
மாண்புறு மாநபி சொன்னார்கள்
மதித்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

ஆண்கள் போன்று பெண் அணிதல்
பெண்ணைப் போன்று ஆண் அணிதல்
வேண்டாம் என்றார் நபிநாதர்
விரும்பி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பகட்டாய் உடைகள் அணியாதீர்
பணிவாய் எளிதாய் உடுங்களென
புகழுக்குரிய நபிசொன்னார்
போற்றி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

எளிதாம் உடையே நபிமார்கள்
என்றும் விரும்பி உடுத்தார்கள்
எளிதாய் வாழ நபிசொன்னார்
ஏற்று ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

வறியோர் தமக்கு உடையீந்து
வளமாய் வாழ வழிசெய்தல்
அரிதாம் செயலென நபிசொன்னார்
அறிந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

அல்லாஹ் திருப்பெயர் முதலோதி
அருந்துக உணவும் பானமென
வள்ளல் நபிமணி சொன்னார்கள்
வாழ்த்தி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலது கரத்தால் உணவுண்பீர்
வலதால் பானம் பருகுமென
நலமே கொழிக்கும் நபிசொன்னார்
நயந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

ஏழை களையே அழைக்காமல்
இருப்போர் தமக்கே விருந்தளித்தல்
சூழும் தீய செயலென்றார்
சுகந்த ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

அழையா விருந்துக் கேகுபவன்
ஆகாத் திருடன் என்றேதான்
வளமார் நபிமணி சொன்னார்கள்
வரிசை ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பெருமைக் காக விருந்தளித்தல்
பிழையாம் செய்கை என்றேதான்
பெருமான் நபிகள் நவின்றார்கள்
பேணி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

உணவின் பின்னே விரல்களையும்
உணவுப் பாத்திரம் அதனையுமே
இனிதாய் சூப்பித் துடையுமென்றார்
ஏற்று ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

உணவின் பின்னே அல்ழாஹ்வை
உவந்தே புகழ்வீர் என்றேதான்
மணக்கும் மாநபி சொன்னார்கள்
மகிழ்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மை மிக்க தலைவரவர்
நிறைவாய் அர்ஷின் நிழல்தன்னில்
சீர்பெறு வாரென நபிசொன்னார்
சேர்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இறையை வணங்கும் வழிபாட்டில்
என்றும் திளைத்த இளைஞரவர்
நிறைவாய் அர்ஷின் நிழல் பெறுவார்
நினைத்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இறையின் இல்லம் பள்ளியிலே
இதயங் கலந்து வாழுபவர்
இறையின் அர்ஷின் நிழல் பெறுவார்
ஏற்று ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இறைவன் தனக்காய் நேசித்து
இறைக்காய் வெறுக்கும் இருமனிதர்
முறையாய் அர்ஷின் நிழல் பெறுவார்
முனைந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

எழிலார் வனிதை அழைக்கையிலே
இறையைப் பயந்து வெறுப்பவரோ
ஒளிவார் அர்ஷின் நிழலுறுவார்
உணர்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

எவர்க்கும் தெரியா நிலைமையிலே
ஈந்து தருமம் செய்பவரோ
உவக்கும் அர்ஷின் நிழல்பெறுவார்
உயர்வாம் ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாய் இறையை நினைந்துற்று
தானாய்க் கண்ணீர் சிந்துபவர்
இனிதாய் அர்ஷின் நிழலுறுவார்
ஏற்று ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

அநீதி இழைக்கப் பட்டவரோ
அழுது கேட்கும் துஆவதனை
தனியோ னிறைவன் கபூல் செய்வான்
தகைமை ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பெரியோர் தம்மைப் பேணாதார்
பிரியங் கொள்ளார் சிறியார்மேல்
நெறியே யில்லா நீசரென்றார்
நினைந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

கையால் நாவால் பிறருக்குக்
கடிந்தே தீங்கு செய்யாதார்
மெய்யாய் முஸ்லிம் எனச்சொன்னார்
மேன்மை ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

அழ்ழாஹ் தன்னை வணங்கிடுக
அவனுக் கிணையே சேர்க்காதீர்!
அருமை நபிகள் அருளியதை
அறிந்தே ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இழிவாம் விபச்சா ரக்குற்றம்
என்றும் செய்யா தீரென்று
எழிலார் நபிமணி இயம்பினரே!
ஏற்று ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்தோர் கூலியினை
வியர்வை உலரு முன்னேதான்
மேலாய்க் கொடுக்க நபி சொன்னார்!
மேன்மை ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

நீங்கள் உண்டு உடுப்பதையே
நிறைவாய் வேலைக் காரருக்கும்
பாங்காய்க் கொடுங்க ளென்றார்கள்!
பாடி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

உங்கள் வேலைக் காரருக்கு
*உறுத்தும் கடினப் பணிகளினை*
நீங்கள் கொடுக்கா தீரென்றார்!
நினைந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

துரோகம் செய்தல்; பொய் கூறல்;
கொடுத்த வாக்கு மாறிடுதல்
வரோதி "முனாபிக்" குணமென்றார்!
விருப்பாய் ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

மாண்பார் மார்க்கக் கல்வியினை
மதிப்பாய்ப் பெற்றோர் மானிலத்தில்
மாண்புக் குரியோ ரெனச்சொன்னார்!
மதித்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

கொடிதாம் கோள்புறம் பேசுபவர்
கொடுந்துயர் கப்றில் காண்பாராம்!
முடியாப் புகழ்நபி மொழிந்தார்கள்
முனைந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநீர் கழித்து சீராகச்
சுத்தம் செய்யா திருப்பவரும்
உறுவார் கப்றில் துன்பமென்றார்!
உணர்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இறையின் இல்லம் பள்ளிதனை
எழிலாய்க் காட்டும் மனிதரவர்
நிறைவாய்ச் சுவனம் புகுவாரென்றார்!
நினைந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

வேளை தவறா முறையினிலே
விரும்பித் தொழுகை பேணுமென
சாலச் சிறந்த நபிசொன்னார்!
சாந்தி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பெற்றோர் தம்மைப் பேணுபவர்
பெறுவார் இறையின் பிரியமென
பொற்குண நபிமணி போதித்தார்
புகழ்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

அறிவைத் தேடல் ஆண்பெண்கள்
அனைவர் மீதும் கடனென்று
நெறிசூழ் நபிமணி நிகழ்த்தினரே!
நினைந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

உயர்வே மிக்க உலமாக்கள்
ஒளிரும் நபிமார் வாரிசென
நயக்கும் நபிமணி நவின்றார்கள்!
நாடி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தா முறையிற் பொருளீட்டிப்
பொலிந்த உடலோ நரகிற்கே
பொருந்தும் என்றே நபிசொன்னார்!
போற்றி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பொருளைப் பதுக்கி வைக்கின்ற
பொருந்தா வணிகர் நரகத்தில்
இருப்பார் என்றார் இறைத்தூதர்
ஏற்று ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

துன்பப் படுவோர் துயர்போக்கித்
தொண்டுகள் செய்தல் சிறந்ததென
அண்ணல் நபிமணி அருளினரே!
அறிந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

அயலார் வீட்டில் பசியோடு
அல்லல் படுகையில் புசிப்போர்கள்
நயக்கும் நபியினைச் சாராராம்!
நாடி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

இரக்கங் காட்டார் மற்றோரால்
இரக்கங் காட்டப் படாரென்று
சிறக்குங் குணநபி செப்பினரே!
சேர்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

வீணாய் விரயஞ் செய்வோர்கள்
வீணன் ஷைத்தான் தோழரென
மாண்பார் நபிமணி சொன்னார்கள்!
மகிமை ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டி யெடுப்போர் கொடுப்போர்கள்
வயிறு பெருத்தே மறுமையிலே
முட்டி மோதித் திரிவரென்றார்!
முனைந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பொது நிதியதனைப் புசிப்போர்கள்
பொல்லா நரகில் மறுமையிலே
புதைவார் என்றே நபிசொன்னார்!
புனித ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

தாயின் பாதத் தடியினிலே
தகைமை சுவனம் உண்டெனவே
தோயும் புகழார் நபிசொன்னார்!
தூய்மை ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

முதுமை யடைந்த பெற்றோரை
மதியா திருக்கும் பிள்ளைகளோ
கொதிக்கும் நரகில் வீழ்வரென்றார்!
கூடி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

குணத்திற் சிறந்த பெண்ணவளே
குவலய மீதிற் சிறந்தவளாம்!
மணக்கும் நபிமணி சொன்னார்கள்!
மகிழ்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

உள்ளந் திருந்தின் உடல்முழுதும்
ஒழுங்காய்த் திருந்தும் என்றேதான்
வள்ளல் நபிமணி சொன்னார்கள்!
வாழ்த்தி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம் பரமாய் வீடுகளை
அளவிற் பெரியதாய்க் கட்டாதீர்!
நாடும் போற்றும் நபிசொன்னார்!
நாடி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

வீட்டின் உள்ளே நுழைகையிலே
விரும்பி மனைவி மக்கட்கு
நாடி ஸலாமே கூறுமென்றார்!
நயந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

தந்தை தாயைப் பேணிடுவீர்!
தகைமை ஆசான் தனைமதிப்பீர்!
சிந்தை செழிக்கும் நபிசொன்னார்!
சீர்மை ஸல்வாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

அறிஞர் உடனே அமருங்கள்!
அன்பாய் முதியோர்க் குதவுங்கள்!
நெறியே சிறந்த நபிசொன்னார்
நினைந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

தீயோ விறகைத் தின்பதுபோல்
தீய்க்கும் பொறாமை நன்மைகளை!
ஆய்ந்தே சொன்னார் அண்ணல் நபி!
அருமை ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

மதுவும், சூதும் மாபாவம்;
மனத்தால் கூட எண்ணாதீர்!
நிதமும் போற்றும் நபிசொன்னார்!
நினைந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வும், சுகமும் பெருங்கொடையாம்;
ஒழுங்காய் அவற்றைப் பேணுமென
தூய்மை நபிமணி சொன்னார்கள்!
துதித்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

உரைக்கக் கசப்பா யிருந்தாலும்
உண்மை தனையே உரையுமென
மறைவழி வாழ்நபி சொன்னார்கள்!
மகிழ்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பிணக்குறும் இருவர் தம்மிடையே
இணக்கம் செய்தல் வேண்டுமென
குணச்சிறப் பொளிர்நபி கூறினரே!
கூடி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

தானும் குர்ஆன் தனைக்காற்று
தரமாய்க் கற்றுக் கொடுப்பவரே
மேன்மை மிக்க மனிதரென்றார்!
மேவி ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

நோன்பு துறக்கும் நேரத்தில்
நெஞ்சங் கசிந்து கேட்கின்ற
மாண்பார் துஆவோ கபூலாகும்!
மாண்பு ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

பக்குவ மான நோன்பதுவோ
பாவக் கறைகள் போக்குமென
மக்கத் தரசர் நபிசொன்னார்;
மகிழ்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவனந் திறக்கும்; நரகடையும்
சுகந்த றமழான் மாதத்தில்
புவனம் போற்றும் நபிசொன்னார்
புகழ்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

வரிசை நோன்பினர் வாய்நாற்றம்
வளமாய் மணக்கும் இறையிடத்தில்;
அருமை நபிமணி அருளினரே!
அறிந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

ஸக்காத் கொடுக்காப் பொருளதுவோ
சர்ப்பம் ஆகித் தீண்டுமென
மக்காத் திருநபி சொன்னார்கள்!
மாண்பு ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)

ஏற்கப் பட்ட ஹஜ்ஜுக்கு
ஏற்ற பரிசு சுவனமென
போற்றும் நபிமணி சொன்னார்கள்;
புகழ்ந்து ஸலவாத் ஓதிடுவோம்!
(ஸலாத்துல்லாஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகாரீயின் பொன்மலர்கள்

பக்திதரும் நோன்பதுவோ
பாதுகாக்கும் கேடயமாம்
அக்கடமை செய்வோர்கள்
அருவருக்கும் தீச்செயலும்
அக்கிரம மடச் செயலும்
அணுவளவும் செய வேண்டாம்!
உக்கிரமாய் எவரேனும்
உறுத்துதற்கு வந்துற்றால்
“பக்தியுறும் நோன்புடையேன்”
எனப்பகர்க இரண்டு முறை!
வரிசையுறு நோன்பாளி
வாய்வாடை இறையிடத்தில்
நறுமணமாம் கஸ்தூரி
வாசம் போற் கமழ்ந்திடுமே
உறுதியுடன் உபவாசி
உணவுகளைப் பானத்தை
வெறுக்கின்றான் எனக்காக,
விசுவாச உபவாசம்
எனக்குத் தான் உரித்துடைத்து
ஏற்ற பலம் நானளிப்பேன்,
இணக்கமுறும் செயல்களுக்குப்
பன்மடங்கு பரிசுண்டு
மணக்கும் நோன்பதனின்
மாண்பதனை இறையுரைத்தான்!

பொய்யுரைத்தல், புன்மை செய்தல்
போன்றவற்றை நோன்பாளி
கைவிடாமல் இருப்பாரேல்,
உண்ணாமல் பருகாமல்
மெய்யின்றி நொன்பதனை
மேவுபவர் செய்கையினை
உய்வளிக்கும் இறையவனோ
ஒரு போதும் கணக்கிலெடான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமான றமாழானின்
வருகையினால் சுவனத்தின்
வாசல்கள் திறந்து விடும்,
வதைக்கின்ற நரகத்தின்
வாசல்கள் மூடிவிடும்,
வன்மையுறு ஷைத்தான்கள்
வலிமையுடன் அடைபடுவர்

கண்ணியமார் லைலத்துல்
கத்ரென்னும் இரவினிலே
நன்மையினை நாடியுடன்
நல் ஈமான் பக்தியுடன்
புண்ணியமாய் வணங்குபவர்
புரிபாவம் தீந்து விடும்
திண்ணியராய் றமழானில்
திறமாக நோன்பிருப்போர்
பண்ணியதுர்ப் பாவங்கள்,
பாதகங்கள் நீங்கிவிடும்

குணக்குன்று நபிநாதர்
கொடைத்திறனோ மிக்கவர்கள்;
அணிமிக்க றமழானில்
அளவில்லாக் கொடை கொடுப்பார்;
இணக்கமுடன் ஜிப்ரீலும்
இறதூலை றமழான்
மணமான இரவுகளில்
மகத்துவமாய்ச் சந்திப்பார்;
கனிவான கருணை நபி
காற்றினிலும் வேகமதாய்க்
கணக்கின்றிக் கொடையளிப்பார்
கண்ணியமார் றமழானில்.

(ஸஹீஹுல் புகாரீயிருள்ள
ஹதீஸ்களின் கருத்தமைந்த
கவிதைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org